தமிழ் நாடு அரசு

**சுருக்கம்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - ஆதி திராவிட பழங்குடியின மாணவியரின் கல்வி மேம்பாடு தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஆதி திராவிட பழங்குடியின மாணவிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை அளித்தல் 1999-2000ம் ஆண்டிற்கு நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகின்றது

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசாணை (நிலை) எண், 24

நாள் 27.3.2000

படிக்கப்பட்டது

1, அரசாணை (நிலை) எண், 135 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.8.94,

2,அரசாணை (நிலை) எண் 41, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22,3,95,

3,அரசாணை (நிலை) எண், 112, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,, நாள் 27,5,97

4,அரசு கடித எண், 17322-ஆதிந,9(1)-97-2 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 28,7,97

5, அரசாணை (நிலை) எண் 164, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 29,9,97,

6அரசாணை (நிலை) எண் 49, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 26,5,98,

மீண்டும் படிக்கப்பட்டது

7. இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்,கடிதம் ந,க, உ1 ,24822, 99 நாள் 15,6,99, 5,8,99, 16,9,99, 29,11,99 மற்றும் 8,2,2000,

8, மேலாண்மை இயக்குநர், தாட்கோ, கடிதம் சி4, 7684,99, நாள் 6,8,99 மற்றும் 11,2,2000.

## ஆணை.

1998-99ஆம் ஆண்டிற்கு ஆதி திராவிட மாணவிகளைப் பொருத்தமட்டில் தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், விருதுநகர்,திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, கரூர், நாகப்பட்டினம், சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களிலும், பழங்குடியின மாணவிகளுக்கு அனைத்து மாவட்டங்களிலும் 2வது வகுப்பிற்குப் பின்னர் அவர்கள் கல்வியைத் தொடரவியலாத நிலையைப் போக்கி தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும்பொருட்டு ஆண்டுக்கு ரூ 500/ வீதம் 60000 ஆதிதிராவிட/பழங்குடியினர் மாணவிகளுக்கு மூன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஒவ்வோர் ஆண்டு முடிவிலும் அவர்களுக்கு ஊக்குவிப்புத்தொகை வழங்க ரூ 3 கோடிக்கும் (ரூபாய் மூன்று கோடி மட்டும்), மேலும் ஆதி திராவிட/பழங்குடியின மாணவியர் 5வது வகுப்பிற்குப் பின்னர் கல்வியைக் கைவிடும் நிலையைப் போ,ககி அவர்கள் தொடர்ந்து 6ஆம் வகுப்பில் கல்வி பயில்வதை ஊக்குவிதிம் பொருட்டு அக்கல்வியாண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ 100 வீதம் 10 மாதத்திற்கு மாநிலம் முழுவதும் 30000 ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவிகள் பயன்பெறும் வகையில் ஊக்குவிப்புத்தொகை வழங்க ரூ 3 கோடிக்கும் (ரூபாய் மூன்று கோடி மட்டும்) ஆக மொத்தம் ரூ 6,00 கோடிக்கு (ரூபாய் ஆறு கோடி மட்டும்) செலவு செய்வதற்கு மேலே 6வதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசு நிதி ஒப்புதல் வழங்கி ஆணையிட்டது.

2, இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் மற்றும் மேலாண்மை இயக்குர், தாட்கோ மேலே ஏழாவது மற்றும் எட்டாவதில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதங்களில் அனுப்பிய கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதன்படி,ஏற்கனவே தற்போது நடைமுறையில் உள்ளபடி 1999-2000ம் ஆண்டில் 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு மற்றும் 6ஆம் வகுப்பு முடிவில் ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவிகளுக்கு ஊக்குவிப்பு தொகை வழங்க ஏற்கனவே நடப்பு ஆண்டில் தாட்கோவால் செல வழிக்கப்பட்ட தொகை ரூ 1.25 கோடி மற்றும் இருப்பில் உள்ள தொகை ரூ 1 .74 கோடி ஆகியவற்றோடு இந்த ஆண்டில் இத்திட்டங்களுக்காக விடுபட்ட செலவினத்திற்காக அதிகபட்சமாக ரூ 4 .00 கோடி (ரூபாய் நான்கு கோடி மட்டும்) (ஒவ்வொரு திட்டத்திற்கும் முறையே ரூ 2. 00 கோடி வீதம்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும் இத்திட்டங்களை நடப்பு ஆண்டிற்கு தாட்கோ மூலம் செயல்படுத்தவும், அடுத்த ஆண்டு முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல த்துறை மூலம் செயல்படுத்தவும் அரசு ஆணையிடுகிறது..

3, மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்ட செல வினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்,

2225, ஆதி திராவிடர் பழங்குடியினர் ஏனைய பிறபடுத்தப்பட்ட வகுப்பினர் நல ன், 01, ஆதி திராவிடர் நலன், 277, கல்வி ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள், II. மாநிலத்திட்டம்,JX மூன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலுகின்ற ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவியரிடையே படிப்பறிவை வளர்க்க சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், 39, வெகுமதிகள்.

(த, தொ,கு, 2225 01 277 JX 3903)

2225, ஆதி திராவிடர் பழங்குடியினரி ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், 01, ஆதி திராவிடர் நலன், 277,கல்வி, ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள், II மாநிலத் திட்டம் JY ஆறாம் வகுப்பு பயிலுகின்ற ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவியரிடையே படிப்பறிவை வளர்க்க சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம். 39, வெகுமதிகள்,

(த,தொ,கு, 2225 01 277 JY 3901)

4, மேலே பத்தி 2ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை எடுக்கவும், அதனை தாட்கோவின் அலுவல் பெயர்வைப்புத்தொகை கணக்கில் செலுத்தவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இத்தொகை கீழ்க்கானும் கணக்குத் தலைப்பில் சரிகட்டல் என்ற வகையில் வரவு வைக்கப்பட வேண்டும்,

K. Deposits and advances (b) Deposits not bearing interest. 8443.00 Civil Deposits .800. other Deposits.50. Deposits of TAHDCO.

(D.P.Code 8443 00 800 AE 500A (Receipts)

(D.P.Code 9883 00 800 AE 5000 (Outgo))

5,தகுதியுள்ள ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவிகளைக் கண்டறிந்து மாவட்ட வாரியான பட்டியலை உரிய தொகைக்கு அனுமதியளிப்பதற்காக மேலாலண்மை இயக்குநர், தாட்கோவிற்கு அனுப்புமாறு துவக்கக்கல்வி / பள்ளிக்கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

6, இவ்வாணை நிதித்துறையின்ஒப்புதலைஅதன்அலுவல்சார்பற்றஎண்.173/சி,செ.(கி,வை)/2000-2, நாள் 21,3,2000ல் பெற்று வெளியிடப்படுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.சம்பத்குமார்,

அரசு செயலாளர்,

பெறுநர்

இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-5,

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101

இயக்குநர், துவக்கப்பள்ளி, சென்னை-6

இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-6

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,

சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5

மாநில கணக்காய்வுத்தலைவர், சென்னை-18/சென்னை-35/சென்னை-6,

நகல்

நிதி/பள்ளிக்கல்வித்துறை, சென்னை,9

முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ம் (ஆதிந,1/அந) துறை, சென்னை,9,